அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

**அ.எண்:** 69 /2017
**தேதி:** 20.07.2017

**தமிழக மாணவர்களின் மருத்துவ கல்வி கனவுகளை,**
**லட்சியங்களை சிதைக்காதீர்கள்**

**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின்**
**நிறுவன தலைவர் மத்திய அரசுக்கு வேண்டுகோள்**

ஒரு மாணவன் தான் மருத்துவன் ஆகவேண்டும் என தனது 10-12 வயது முதல் தீர்மானித்து அந்த கனவை, அந்த இலட்சியத்தை நோக்கி தனது உழைப்பு பெற்றோரின் சேமிப்பு குடும்பத்தின் வாழ்க்கைமுறை ஆகியவற்றை அதற்கேற்றாற்போல மாற்றிக் கொள்கிறான். பல நேரங்களில், அவனுடன் சேர்ந்து அவன் பெற்றோரும் பல்வேறு தியாகங்களை செய்கிறார்கள்.

இப்படி பல ஆயிரக்கணக்கான தமிழக மாணவர்களின், மக்களின் கனவை, எண்ணங்களை, எதிர்பார்ப்புகளை நீட் என்று ஒரு தேர்வின் மூலம் முடக்கிவைப்பது மாணவர்களின் மேல் எடுத்த கடுமையான நடவடிக்கையாகும்.

இந்தியாவில் இருக்கும் பல்வேறு மாநிலங்கள் பல்வேறு கல்வி முறைகளை பின்பற்றி அதன் மூலம் கல்வி மற்றும் கற்பித்தல் தரங்களும் வேறுபடுகின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. அதே சமயம் அதற்கு மாணவர்கள் காரணமில்லை என்பது நாம் அறிந்த உண்மை.

தற்போது அறிவிப்புக்கு மேல் அறிவிப்பு வெளியிடும் பாரத பிரதமர், இது போன்ற மாறுதல்களுக்கு மக்களும் அவற்றை நிறைவேற்றிட உள்கட்டமைப்புகளும் செயல்முறைகளும் சரியான முறையில் இருக்கின்றனவா என்பதை உறுதி செய்யாமல் அறிவிப்புகளை வெளியிடுவது வரவேற்கத் தகுந்ததல்ல. - உதாரணத்திற்கு, பெரும் பணம் மதிப்பு இழப்பு, சரக்கு மற்றும் சேவை வரி போன்றவைகள்.

நீட் அறிவிப்பு மற்ற அறிவிப்புகளை விட அதிக அளவில் இளைஞர்களை, அவர்கள் எதிர்காலத்தை பாதிக்கும் திட்டம்.

இந்தியா முழுவதும் ஒரே கல்வி முறை என்ற திட்டம் நீண்ட காலமாக நடப்பில் இருந்தால்மட்டுமே, அனைத்து மாணவர்களையும் ஒரே நுழைவு தேர்வின் மூலம் தகுதியை அறிய முடியும்.

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

ஐஐடி யில் நுழைவதற்கு, பல லட்ச மாணவர்கள் 9 வயது முதலே தங்களை தயார் செய்வது போல, நீட் நுழைவு தேர்வுக்கும் மாநில கல்வி திட்டத்தில் கல்வி பயின்றவர்கள் நீண்ட காலம் பயிற்சி செய்யவேண்டும். இல்லையெனில் CBSE கல்வி முறையில் பயின்றவர்களுக்கு மட்டுமே வாய்ப்புகள் அதிகம் என்பது, தமிழக மாநில கல்வி முறையில் பயின்ற மாணவர்களுக்கு எதிரானது, தமிழக கல்வி திட்டத்திற்கே எதிரானது என்றுதான் சொல்லவேண்டும்

சில மாநிலங்களின் கல்வி முறை CBSE தரத்திற்கு சமமான முறையில் அமைக்கப் பட்டுள்ளதால், அவர்களால் எளிதில் நீட் தேர்வை எதிர்கொள்ள முடியும். அப்படியெனில், மாநில அளவில், தமிழகத்தின் மருத்துவ மாணவர்கள் எண்ணிக்கை பெருமளவில் குறைந்துவிடும்.

மிகுந்த உயர்ந்த தரம் வாய்ந்த மருத்துவ நிபுணர்களை தமிழகம் இன்றுவரை உலகத்திற்கு தந்துள்ளதை யாரும் மறுக்க முடியாது. மருத்துவ கல்வியின் தரத்தை உயர்த்த அறிவிக்கப்பட்டுள்ள இந்த திட்டம், வரவேற்கப்பட வேண்டிய ஒன்று ஆனால், அதற்கு முதலில் இந்தியா முழுவதும் ஒரே கல்வி கொள்கை செயல்முறை படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

தமிழகத்தின் மூலையில் ஒரு அரசாங்க பள்ளியில் படிக்கும் மாணவனுக்கு கிடைக்கும் கல்வி, தில்லியில் ஒரு பப்ளிக் பள்ளியில் படிக்கும் மாணவனுக்கு கிடைக்கும் கல்விக்கு நிகராக இருக்க வேண்டும். இது பல்வேறு காரணங்களால் உடனடியாக சாத்தியப்படாது, எனவே பாதிக்க படும் தமிழக மாணவர்களுக்கு நீட் தேர்வில் மாற்று திட்டம் அறிவிக்கப்பட வேண்டும்.

நீட் தேர்வின் முடிவுகள் மட்டுமல்ல, மத்திய அரசின் இந்த கொள்கையே தமிழக மாணவர்களுக்கு எதிராகத்தான் உள்ளது.

தமிழக அரசு நிறைவேற்றி அனுப்பியுள்ள மசோதாவின் அடிப்படையில் மத்திய அரசாங்கமும் குடியரசு தலைவரின் அலுவலகமும் உடனே செயல்படவேண்டும்

தமிழக மாணவர் ஒருவர் கூட முதல் 25 இடத்தில் வராதது, அவர்களின் ஊக்கத்தை வேரோடு சாய்ப்பது போன்றது. இவர்கள் எந்த மாணவருக்கும் சளைத்தவரில்லை. ஆனால் பள்ளியில் என்ன பயிற்றுவிக்கப்படவேண்டும் என்பதை அவர்கள் தீர்மானிக்கவில்லை. ஆனால் தண்டனை மட்டும் அவருக்கு.

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

மத்திய அரசின் இந்த திட்டம், மாநில கல்வி முறையை குறைத்து மதிப்பீடு செய்துள்ளது, மாநிலங்களின் கல்வி முறையின் சுதந்திரத்தை குறைத்துள்ளது, மாணவர்களின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியுள்ளது என்பதை கருத்தில் கொண்டு, மத்திய அரசு உடனடியாக தமிழக மாணவர்களின் நலனுக்கான தமிழக அரசின் மசோதாவை பரிசீலித்து உடனடியாக தீர்வு வழங்க வேண்டும்.

நன்றி, வணக்கம்

உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும்அன்புடன்,

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com